முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

எம்.சி.ஓ.பி. எண். 72/2023

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | கிருஷ்ணவேணி |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | கிருஷ்ணன் |
| வயது | .. | 55 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | கிளியாத்தூர் |
| வட்டம் | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05ஆம் நாள் வியாழக்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

புகாரை என் கணவர் மணிகண்ணன் புகார் கொடுத்தார். டி.என். 02 பியூ 3801 என்ற வாகனம் மீது தான் புகார் கொடுக்கப்பட்டது. மேற்கண்ட எண்ணை குறிப்பிட்டு தான் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சரிதான். மேற்கண்ட இருசக்கர வாகன பதிவு எண். டி.என். 02 பியூ 3801 ஓட்டுனர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ 3 ஆவணத்தில் வண்டி எண் டி.என். 02 பியூ 3810 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே டி.என். 02 பியூ 3810 வாகனம் மோதியதாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்றும் அதனால் இந்த மனுஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. முதல்தகவல் அறிக்கையில் இருசக்கர வாகனத்தின்பதிவு எண் ஒன்றாகவும், என்னுடைய இழப்பீடு கோரும் மனுவில் ஒரு எண்ணாகவும் மேலும் ம.த.சா.ஆ-3ல் குறிப்பிடப்பட்டுள்ள வாகன

எண் ஒன்றாகவும் என வெவ்வேறு எண்களாக இருப்பதால் இந்த மனு சட்டப்படி நிலை நிறுத்ததக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் இரண்டாவது பாராவில் வண்டி எண் டி.என். 02 பியூ 3801 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் விவசாய கூலிவேலை செய்து வருகிறேன். நான் மாத வருமானம் ரூ.10,000/- என சொல்வதற்கு ஆவணம் ஏதும் வைத்திருக்கிறேனா என்றால் இல்லை. ம.த.சா.ஆ.4-ல் டி.என்.02 பியூ 3810 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வாகன எண்ணிற்கும், பாலிசியில் சொல்லப்பட்டுள்ள வாகன எண்ணிற்கும் வித்தியாசம் உள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**